# 17

# சீஷத்துவத்தின் விலை

## (8:18-22)

*8 மற்றும் 9 ஆகிய அதிகாரங்கள், அற்புதங்களின் மூன்று ஜோடிகளை உள்ளடக்குகின்றன (8:1-17; 8:23-9:8; 9:18-34), இவைகள் சீஷத்துவத்தை வலியுறுத்தும் இரண்டு கலந்துரையாடல்களைக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன (8:18-22; 9:9-17). மத்தேயு 8:18-22 வசனப்பகுதியானது, இயேசுவைப் பின்பற்ற விரும்பிய இரு மனிதர்களைப் பற்றிக் கூறி, சீஷத்துவம் மீதான அந்த உரையாடல்களில் முதலாவதைத் தொகுத்துரைக்கிறது. இயேசு தமது சீஷர்களிடம் வேண்டுவது என்ன என்பதன் மீது, இந்தக் கலந்துரையாடலின் கவனக்குவிப்பு உள்ளது. "பின்செல்லுதல்" (akoloutheō) மற்றும் "செல்லுதல்" (aperchomai) என்ற திறவுகோல் வார்த்தைகள், வலியுறுத்தத்திற்காகத் திரும்பத் திரும்பக் கூறப்படச் சாத்தியம் உள்ளது.*

### *நிதிநிலைகள் (8:18-20)*

***[18]பின்பு, திரளான ஜனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கிறதை இயேசு கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்.***

***[19]அப்பொழுது, வேதபாரகன் ஒருவன் வந்து: போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்.***

***[20]அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.***

***வசனம் 18.*** *இயேசு, தேவனுடைய தெய்வீகக் குமாரனாக இருந்தார் என்றாலும், அவர் தமது தாய் மரியாள் மூலமாக, மனித குமாரனாகவும் இருந்தார் (8:20). அது உண்மையாக இருக்கும் பட்சத்தில், அவர் இளைப்படைதலின் மனித பலவீனத்திற்கு உள்ளானவராக இருந்தார். அவர் கப்பர்நகூம் ஊருக்கு வந்ததில் இருந்து, வியாதிப்பட்ட மக்களின் திரளான கூட்டத்தாரால் அவர் முற்றுகை இடப்பட்டிருந்தார். இதன் விளைவாக அவர், உடல்ரீதியான மற்றும் மனரீதியான களைப்பை அனுபவிக்கத் தொடங்கியிருந்தார்.* ***திரளான ஜனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கிறதை இயேசு கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்.*** *"அக்கரைக்கு" என்பது, கலிலேயாக் கடல், மேற்கு மற்றும் கிழக்கு என்று இரு பகுதிகளாகக் கண்ணோக்கப்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அது யோர்தான் நதியின் நீர் உள்வாங்கும் பகுதி மற்றும் நீர் வெளியேறும் பகுதி ஆகியவற்றை இணைக்கும் கற்பனையான செங்குத்துக் கோட்டினால் பிரிக்கப்பட்டது. இது இக்கடலின் கிழக்குப் பகுதியை தெக்கப்போலி மாகாணம் என்று குறிப்பிடுகிறது. கப்பர்நகூம் ஊரானது கலிலேயாக் கடலின் வடமேற்கு மூலையில் இருந்தது.*

***வசனம் 19.*** *கடலைக் கடந்து செல்வதற்கு ஒரு படகில் ஏறுவதற்கு முன்னர் இயேசு, மீண்டும் சந்திக்கப்பட்டார்.* ***அப்பொழுது, வேதபாரகன் ஒருவன் வந்து: போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்.*** *"வேதபாரகன்" (grammateus) என்பவர், பழைய ஏற்பாட்டு வேத வசனங்களையும் மற்ற முக்கியமான பதிவேடுகளையும் கைகளால் பிரதி எடுத்தல் என்ற மிக சிரமமான வேலையைச் செய்பவராக இருந்தார். அவர்களின் வேலைகளினுடைய உண்மை நிலையினால், வேதபாரகர்கள் வசனத்தின் உண்மைக் கருத்துப் பற்றிய தேறிய அறிவு கொண்டவர்கள் ஆயினர். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் போதகர்கள் என்று வகைப்படுத்தப் பட்டிருந்தனர், அதே வேளையில் பரிசேயர்கள் பொதுவாக இவ்வாறு வகைப்படுத்தப் படாது இருந்தனர்.*

*இந்த வேதபாரகரின் உண்மைத்தன்மை பற்றிக் கேள்வி கேட்க நம்மிடம் காரணம் எதுவும் இல்லை. இருந்தபோதிலும், தனிப்பட்ட ஆதாயம் என்பது இவர் இயேசுவைப் பின்பற்ற விரும்புவதற்கான நோக்கமாக இருந்திருக்கலாம். இவர் இயேசுவை "போதகரே" (didaskalos) என்று மரியாதை நிறைந்த வகையில் அழைத்தார். ஒரு வேதபாரகர் இயேசுவை இப்படிப்பட்ட ஒரு பெயரைக் கொண்டு அழைத்தல் என்பது தன்னிலேயே குறிப்பிடத் தக்கதாக உள்ளது. இருப்பினும் எண்ணற்ற மக்கள் - இயேசுவின் எதிராளிகளும்கூட - அவரை இவ்வாறு அழைத்தனர் (12:38; 19:16; 22:16, 24, 36).*

***வசனம் 20.*** *இயேசு* ***நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை*** *என்று வேதபாரகரிடம் கூறியதன் மூலம் அந்த மனிதரின் தீர்மானத்தைச் சோதித்துப் பார்த்தார். மீண்டும் ஒருமுறை அவர் தமது செய்தியை எடுத்துக் கூறுவதற்கு இயற்கையை ("நரிகள்" மற்றும் "பறவைகள்") பயன்படுத்தினார் (காண்க 6:26, 28). இயேசுவின் பதில், "இந்த சூழ்நிலைக்குத் தழுவிக்கொள்ளக் கூடிய ஒரு பொதுவான பழமொழி போன்று அதிகமாக உள்ளது."[1] மைக்கேல் J. வில்க்கின்ஸ் அவர்கள், இயேசுவின் ஊழியம் "வசதிநிறைந்த இலாபங்களுடன் கூடிய ஒரு நிறுவன நிலைநாட்டுதலின் விளைவாக" இராது என்று கூறி அவரது ஊழியத்தைப் பற்றிச் சித்தரித்தார்.[2]*

*இயேசு வாழ்வதற்கு ஒரு வசிப்பிடம் இல்லாதவர் என்ற வகையில் "வீடற்றவராக" இருக்கவில்லை. அவர் அந்த வேளையில் கப்பர்நகூம் ஊரைவிட்டுப் புறப்படத் தயார் செய்து கொண்டு இருந்தார், இந்த ஊர் அவரது வெளிப்படையான ஊழியத்தின் பெரும்பான்மையான காலகட்டத்தில் அவர் தங்கியிருந்த இடமாகத் தோன்றுகிறது. அவர் பெத்தானியில் மரியாள், மார்த்தாள் மற்றும் இலாசரு ஆகியோரின் வீட்டில் நேரத்தைச் செலவிட்டார் (லூக்கா 10:38, 39; யோவான் 12:1-3), மற்றும் அவர் மற்ற பலவீடுகளில் வரவேற்கப்பட்டிருப்பார் என்பது நிச்சயம் (காண்க 10:11). இருப்பினும் அவர் தமது சொந்தமானது என்று அழைக்க ஒரு வீட்டைக் கொண்டிருக்கவில்லை. நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்கும் இயேசு, ஒரு சுற்றித்திரியும் பிரசங்கியாராக, பயணம் செய்யும் சுவிசேஷ ஊழியராக, தொடர்ந்து பயணம் செய்பவராக இருந்தார். பழங்காலத்துத் தீர்க்கதரிசிகள் போன்று அவர் அடிக்கடி, நட்சத்திரங்களின் கீழ் வெட்டவெளியில், கல்லை மாத்திரமே தலையணையாகக் கொண்டு உறங்கியிருக்கலாம். அவர் தமது*

*பின்புறத்தில் துணிகளைத் தவிர வேறு எதையும் கொஞ்சமே சொந்தமாகக் கொண்டிருந்தார். ஊக்கமான வேதபாரகர் இயேசுவைப் பின்பற்றத் தேர்ந்து கொள்ளும் முன்பு, அவரது வாழ்வுநடையை ஆராய்ந்து பார்த்தல் அவசியமாக இருந்தது.*

*இயேசு ஒரு நகரில் இருந்து இன்னொரு நகருக்குப் பயணம் செல்லுகையில், அவர் அடிக்கடி புறக்கணிக்கப்பட்டார். அவரது சொந்த மக்களே அவரைப் புறக்கணித்தனர் (யோவான் 1:11), மற்றும் யூதேயா நாட்டில் இருந்தவர்களும் அப்படியே செய்தனர் (யோவான் 5:18). கலிலேயாவில் இருந்தவர்கள் அவரைவிட்டுத் திரும்பினர் (யோவான் 6:66), மற்றும் கதரேயன் நாட்டில் இருந்தவர்கள் தங்கள் எல்லைப் பகுதியைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டனர் (8:34). சமாரியாவில் இருந்த ஒரு நகரத்தார் அவர் அங்கு தங்குவதற்கு அனுமதிக்க மறுத்து விட்டனர் (லூக்கா 9:52, 53). முடிவில் இந்த உலகமே அவரைப் புறக்கணித்தது (27:23).*

*“மனித குமாரன்” என்பது இயேசு தம்மைத் தாமே விவரிக்க அடிக்கடி பயன்படுத்திய சொற்றொடராக இருந்தது. மத்தேயு 8:20ல் உள்ள இந்த நிகழ்வு, புதிய ஏற்பாட்டில் அவர் இந்த அடைமொழியைப் பயன்படுத்திய எண்பத்தி எட்டு முறைகளில் முதலாவதாக உள்ளது. “மனுஷகுமாரன்” என்பது மேசியாத்துவப் பட்டப்பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது (காண்க தானியேல் 7:13, 14) தெளிவாக இருக்கையில், இது மனிதத்துவத்துடன் இயேசுவை நெருக்கமாகத் தொடர்பு படுத்தும் அடைமொழியாகவும் உள்ளது.[3] இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர், மாபெரும் தாழ்மையான செயல்பாட்டில், பூமிக்குரிய எல்லா ஆதாயத்திலும் தம்மையே வெறுமை யாக்கி மனிதர்கள் மத்தியில் ஒரு பிச்சைக்காரர் போன்று வாழ்ந்தார் (காண்க பிலிப்பியர் 2:5-8).*

## *குடும்பம் (8:21, 22)*

***21 அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான்.***

***22 அதற்கு இயேசு; மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்.***

***வசனம் 21.*** *இரண்டாவது விசாரணையாளரை அவருடைய* ***சீஷர்களில் வேறொருவன்*** *என்று விவரித்தலானது, அவரும் அந்த வேதபாரகரும், கிறிஸ்துவின் சீஷர்களாக இருந்தனர் அல்லது ஆயினர் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. இந்த மனிதர் பன்னிருவரில் ஒருவராக இருந்தார் என்று நம்புதல் மிக நீண்ட இழுவையாக உள்ளது, ஏனெனில் “சீஷன்” (mathētēs) என்ற சொற்றொடர் இங்கு ஒரு விரிவான கருத்தளவில் பயன்படுத்தப்பட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இந்தப் பட்டப்பெயர் பன்னிருவருக்குப் பயன்படுத்தப்பட முடியும் என்றிருக்கையில், இது மிகவும் அடிக்கடி, “கற்றுக்கொள்பவர்” அல்லது “மாணவர்” என்ற பொதுவான கருத்தையே தருகிறது, மற்றும் இதில் ஆவிக்குரிய கருத்துப்பொருள்*

எதுவும் இருப்பதில்லை. இது, மேலோட்டமான அல்லது உண்மையாகவே அர்ப்பணிப்புணர்வு கொண்ட, எவ்வகையான “பின்பற்றாளரையும்” குறிக்க முடியும்.

இவ்விடத்தில் லூக்கா, மனிதருக்கு இயேசுவின் அழைப்பை உட்செருகினார்: “என்னைப் பின்பற்றிவா” (லூக்கா 9:59; காண்க மத்தேயு 8:22). கலிலேயாக் கடலினூடே அவர்களின் பயணத்தில் உடனடியாகத் தொடங்கி, அந்த மனிதர் ஒரு நெருங்கிய சீஷராகத் தம்முடன் பயணம் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பியதாகக் காணப்படுகிறது. அம்மனிதர், **ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்** என்று பதில் அளித்தார். அவரது பதிலானது அந்த வேளையில் இயேசுவை மிகவும் நெருங்கிப் பின்பற்றாது இருப்பதற்கான சாக்குப் போக்காக இருந்திருக்கலாம். குறைந்தபட்சம் அவர் உண்மையான சீஷத்துவத்திற்கு முன் குடும்பக் கடமைகளை வைத்திருக்கலாம் (காண்க 10:37; லூக்கா 14:26).

அம்மனிதரின் உண்மையான சூழ்நிலை பற்றிய விபரங்கள் தெளிவற்றவைகளாக உள்ளன, ஆனால் மூன்று சாத்தியக்கூறுகள் எழுகின்றன. முதலாவது அம்மனிதர், வியாதிப்பட்டோ அல்லது வியாதிப்படாமலோ இருந்த தமது தந்தையிடம் தொடர்ந்து இருக்கும் வாய்ப்பை மாத்திரம் கேட்டு இருக்கலாம். வயதான பெற்றோர்கள் நித்தியத்திற்கு இளைப்பாறுதல் அடையும் வரைக்கும் அவர்கள் மகன்கள் வீட்டிலேயே இருந்து அவர்களைப் பராமரிக்க வேண்டியது அவர்களின் கடமையாக இருந்தது. இம்மனிதரால் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர், “தந்தை இறந்து சொத்துக்கள் பிரிக்கப்படும் வரையிலும், குடும்ப அலுவல்களில் தந்தைக்கு உதவுவதற்கு ஒரு மகன் கொண்டிருந்த பொறுப்பைக் குறிப்பதற்கு தூரகிழக்கு நாடுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட உருவகப் போச்சாக” இருந்தது என்று John MacArthur, Jr., அவர்கள் உரிமை கோரினார்.[4] இந்தச் சொல்விளக்கம் இன்றைய நாட்களிலும் மத்திய கிழக்கு நாடுகளின் பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் கூடுதலாகக் கூறினார்.

இரண்டாவது, இம்மனிதரின் தந்தை உண்மையிலேயே இறந்து போயிருந்து, சவஅடக்கம் குறித்த விஷயங்களைக் கவனிக்க இம்மனிதர் விரும்பி இருக்கலாம். இது சற்றே தாமதத்தை மாத்திரமே ஏற்படுத்தும், ஏனெனில் மக்கள் இறந்த அதே நாளில் அவர்களின் உடல்கள் அடக்கம் பண்ணப்பட்டன (27:59, 60; நடபடிகள் 5:5, 6, 10). சவ அடக்கத்தைக் கொடர்ந்து ஒருவாரம் துக்கம் கொண்டாடுதல் இருந்தது (ஆதியாகமம் 50:10; 1 சாமுவேல் 31:13). மனதைத் தொடும் இப்படிப்பட்ட வேண்டுகோளை இயேசு தவிர்த்திருப்பார் என்பது சந்தேகம் நிறைந்ததாகவே உள்ளது.

மூன்றாவது, இம்மனிதரின் தந்தை சற்று நேரத்திற்கு முன்பு இறந்திருந்து சவ அடக்கத்திற்கான பணிகளின் முதல் பகுதி நிறைவு பெற்றிருக்கலாம். உடலானது துணிகளால் போர்த்தப்பட்டு கல்லறையில் வைக்கப்பட்டு இருக்கலாம். இருப்பினும், ஒரு ஆண்டிற்குப் பின்பு மகன் கல்லறைக்குத் திரும்பவந்து அஸ்திக்கலசம் என்னப்படும் பெட்டியில் தந்தையின் எலும்புகளை வைக்க வேண்டும்.[5] பின்பு, எதிர்காலத்தில் அந்தக் குடும்பத்தில் இறக்கும் உறுப்பினர்களுக்கும் இடம் ஏற்படுத்தப்படும் வகையில், அஸ்திக்கலசமானது

கல்லறையின் பின்புறத்தில் ஒரு மாடத்தில் வைக்கப்படும். இவ்விஷயத்தில், இம்மனிதர் இயேசுவைப் பின்பற்றுவதில் மிக ஆழமான உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர், தமது கடைசி கடமையை நிறைவேற்ற விரும்பினார் என்று கூறலாம்.

மரித்தோரை, விசேஷமாக ஒருவர் தமது பெற்றோரை அடக்கம் பண்ணுதல் என்பது, ஒரு பரிசுத்தமான கடமையாக இருந்தது (ஆதியாகமம் 23:1-20; 25:7-10; 35:28, 29; 49:28-50:14). "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16) என்பது இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்ட ஐந்தாவது கட்டளையாக இருந்தது, மற்றும் இது ஒரு மகன் தனது பெற்றோருக்குத் தகுதியான சவ அடக்கத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்திற்று என்பதில் சந்தேகம் இல்லை. ஒருவர் தமது பெற்றோரை அடக்கம் செய்தல் என்பது, ஸேமாவை தினந்தோறும் உச்சரித்தல் அல்லது கை மற்றும் நெற்றியில் பட்டைகளைக் கட்டிக்கொள்ளுதல் ஆகியவற்றைக் காட்டிலும் முக்கியமானது என்று ரபீக்கள் நினைத்தனர்.[6] மத்தேயு சுவிசேஷ விபரத்தில் பிற்பாடு இயேசு, ஒருவர் தமது பெற்றோரைக் கனப்படுத்தும்படியான தேவனுடைய கட்டளையைத் தற்காத்தார் (15:1-9). இருந்தபோதிலும், இயேசுவைப் பின்பற்றுதல் என்பது எல்லாவற்றைக் காட்டிலும் முன்னுரிமை தரப்பட வேண்டிய விஷயமாக உள்ளது.

**வசனம் 22. அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்.** அவருடைய பதிலுரையானது, செயல்விளைவில் "இந்த உலகமானது இந்த உலகத்து விஷயங்களைப் பற்றி அக்கறைப்படட்டும்" என்று அர்த்தப்படுத்திய "பழமொழிரீதியான பேச்சு உருவகமாக" இருந்தது.[7] இது, ஆவிக்குரிய வகையில் மரித்திருப்பவர்கள் சரீரத்திற்குரிய வகையில் மரித்துள்ள தங்கள் உறவினர்களை அடக்கம் பண்ணிக்கொள்வார்கள் என்று அர்த்தப்பட முடியும். சரீரத்திற்குரிய வகையில் சற்றுக்காலம் மரித்திருந்தவர்கள், தற்போது மரித்தவர்களை அடக்கம் பண்ணுவார்கள் என்பது முரண்பாடு நிரம்பிய இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. ஆயினும், நித்திய ஜீவனின் அவசியம் பற்றிய இராஜ்யத்தின் செய்தியை எடுத்துச் செல்லுதலின் ஆவிக்குரிய வகையிலான மாபெரும் அக்கறைக்கு இம்மனிதர் தம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று இயேசு அழைத்தார்.

இயேசுவை அணுகி "ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" என்று கேட்ட மூன்றாவது விசாரணையாளர் ஒருவரை லூக்கா கூடுதலாகக் கூறினார் (லூக்கா 9:61). இந்தக் காட்சியானது எலியா எலிசாவை அழைத்ததன் எச்சமாக உள்ளது. தீர்க்கதரிசியைப் பின்பற்றுவதற்கு முன்னர் எலிசா, தமது பெற்றோரிடத்திற்குத் திரும்பி அவர்களிடம் பிரிவுசொல்லி வரவேண்டும் என்று விரும்பியபோது, அவ்வாறு அவர் செய்வதற்கு எலியா அனுமதித்தார் (1 இராஜாக்கள் 19:19-21). இருப்பினும் இயேசு, சீஷத்துவத்திற்கான தமது நிபந்தனைகளில் எலியாவைக் காட்டிலும் அதிகம் வேண்டுமென்று கேட்பவராக இருந்தார். அவர், "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும்

*தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்று பதில் அளித்தார் (லூக்கா 9:62). இயேசுவின் உண்மையான சீஷராக இருத்தல் என்பது முற்றிலுமான அர்ப்பணிப்பைக் கேட்பதாக இருக்கும். இயேசு சீஷத்துவம் கேட்கும் தர அளவைகளில் தாழ்ந்தவற்றை விரும்புவதில்லை.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## இயேசுவின் மனிதத்துவம் *(8:20)*

*"மனித குமாரன்" என்பதே இயேசுவினால் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட பட்டப்பெயராக இருந்தது. அவர் தமக்கு, "தேவகுமாரன்" என்ற பட்டப்பெயரைத் தேர்ந்துகொள்ள எல்லா உரிமையும் கொண்டிருந்தார், ஆனால் "மனித குமாரன்" என்பதே அவர் முன்னுரிமை கொடுத்து விரும்பித் தேர்ந்த ஒன்றாக இருந்தது. இது, இயேசு தம்மைக் குறித்து முக்கியமான ஒரு கூற்றை ஏற்படுத்தினார் என்று மறைமுகமாக உணர்த்துவதாகக் காணப்படலாம். ஒருபுறத்தில் இது அவரது முழு மனிதத்துவத்தை வலியுறுத்துகிறது. இன்னொரு புறத்தில் இது மீட்புசார்ந்த மற்றும் அதிகாரத்துவமான அவரது ஊழியத்தை வலியுறுத்துகிறது. தேவன் ஒரு மனிதரானார், எனவே அவர் நமக்கு உறவுபட்டவராகவும் நம்மை அவரது உறவுமுறைக்குள் கொண்டுசேர்ப்பவராகவும் இருக்க முடிந்தது.*

---

குறிப்புகள்

[1]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 77. [2]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 59. [3]The designation "son of man" appears throughout the Book of Ezekiel, emphasizing the prophet's humanity. [4]John MacArthur, Jr., *The MacArthur New Testament Commentary: Matthew 8-15* (Chicago: Moody Press, 1987), 24-25. [5]காண்க Mishnah *Sanhedrin* 6.6; *Pesahim* 8.8; *Moed Katan* 1.5, 6. [6]Mishnah *Berakoth* 3.1; Talmud *Berakoth* 31a. [7]MacArthur, 25.